டாக்டர் இரா. சனார்த்தனம்: பொதுவாக சுரங்கப் பாதை அமைப்பதில் சிரமம் இருக்கிறது. மதுரையை ஆண்ட மன்னர்கள் சுரங்கப் பாதை அமைத்து, அவை அடைபட்டிருந்தால், அவற்றைக் கண்டுபிடித்து, தூர் எடுக்கும் யோசனை அரசுக்குண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியே இருந்தாலும் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாக இப்படிப்பட்ட சுரங்கப் பாதைகள் திருமலை நாயக்கர் மகால் போன்ற இடங்களில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படியிருந்தாலும் நம்முடைய பாதசாரிகள் செல்லத்தக்க அளவிற்குத் தகுதியான சுரங்கப் பாதையாக இருக்குமா என்பதைப் பார்த்துத்தான் செய்ய வேண்டும்.

திரு. ம. சங்கரலிங்கம்: மதுரையை ஆண்ட மன்னர்கள் ஒளிந்து ஓடுவதற்குக் கட்டிய சுரங்கப் பாதையை இப்போது கண்டுபிடிக்க, அரசு முயற்சி எடுக்குமா? அப்படிச் செய்ய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தை, உள்ளாட்சித் துறை கேட்டுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதுபோன்ற உத்தேசமில்லை.

House-tax in Tindivanam Municipality.

* 120 *Q*.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the estimated loss of revenue to Tindivanam Municipality, because of the delay to assess House-tax in time?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இக்கேள்விக்கு இடமில்லை. திண்டிவனம் நகராட்சியில் வருமான இழப்பு இல்லாமல் கட்டிடங்கள் அனைத்துக்கும் உரிய காலத்தில் வரி நிர்ணயம் செய்யப்படுகின்றது.

திரு. க. இராமமூர்த்தி: வீடு கட்டி முடித்த பிறகு, திண்டிவனம் நகராட்சியிலிருந்து 'கம்ப்ளிஷன் சர்ட்டிபிகேட்' (completion certificate) வாங்கிச் சென்று, அதற்குப் பிறகுதான் மின்சாரத் துறையிலே மின் இணைப்பு பெற்றிருக்கிறார்கள். அப்படி மின் இணைப்பு பெற்ற பெரிய வீடுகள் பல ஆண்டுக் காலமாக வரி விதிப்புக்கு ஆளாகாமல் இருக்கின்றன. 'கம்ப்ளீஷன் சர்ட்டிபிகேட்' அடிப்படையிலே மின் இணைப்பு பெற்ற பல வீடுகள் வரி விதிப்பிற்கு ஆளாகவில்லை. அப்படிப்பட்ட வீடுகள் பற்றிய தகவல்கள்

அரசிடம் இருக்கிறதா ? இல்லையென்றால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்யுமா ? அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

THE HON. THIRU P. KOLANDAIVELU: If there is any particular case, that may be given to me so that I may take action separately. அதுமாதிரியான தகவல்கள் இருந்தால், என்னிடம் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன். பொதுவாக எல்லா வீடுகளுக்கும் வரி நிர்ணயித்து, வசூலிக்கப்படுகிறதென்ற குறிப்புதான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: நகராட்சி மன்றம் 'கம்ப்ளீஷன் சர்ட்டிபிகேட்' கொடுத்த பிறகுதான், மின் வாரியம் மின் இணைப்பு கொடுக்க முடியும். அப்படி 'கம்ப்ளீஷன் சர்ட்டிபிகேட்' கொடுத்த பிறகு, திண்டிவனத்தில் எத்தனை வீடுகள் எத்தனை மாதங்களாக வரி விதிப்புக்கு ஆளாகாமல் இருக்கின்றன என்ற தகவலை துறை மூலமாகச் சேகரிப்பது நலமாக இருக்கும். நான் அந்த விவரங்களைக் கொடுத்து, தனிப்பட்டவர்களை விரோதித்துக் கொள்வது சரியாக இராது. இப்படி நடந்திருக்கிறது என்பதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். அரசு இது குறித்து பரிசீலனை செய்யுமா ?

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூலக் கேள்வியில் இதுபற்றி குறிப்பாகக் கேட்கப்படவில்லை. எல்லா வீடுகளையும் பொறுத்தவரையில் தான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதனால் அதுபற்றிய வேறு குறிப்புகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளைக் கவனத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: பலர் வழக்கு மன்றத்திற்குச் சென்றுதான் வீட்டு வரியை உரிய காலத்தில் மதிப்பிட முடியாமல் போனதற்குக் காரணமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் இதுசம்பந்தமாக ஒரு தீர்ப்பு இருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் நாம் வரி விதிப்பு போட்டால்கூட, உடனே உயர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கி வந்துவிடுகிறார்கள்.